# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor / Publisher

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 33 November- 2020 Issue - 11**


ஆசிரியர் உரை

## இரண்டு மைல் தூரம் போவோம்

**உ**லகெங்கிலும் வாழும் மனிதர்களுடைய சமுதாய வாழ்வில் **தலைமுறை இடைவெளி** என்பது ஒரு பாதிப்பை ஏற்படுத்தவே செய்கிறது. அதாவது, முந்தின தலைமுறையைச் சேர்ந்தவர்களுக்கு பரிச்சயமான பல காரியங்கள் அடுத்த தலை முறையைச் சேர்ந்தவர்களுக்கு அந்நியமாகி விடுகிறது. அப்படிப் பட்டவைகளைப் புரிந்து கொள்ள புதிய தலைமுறையினர் சிரமப்படுவார்கள். இப்படிப் புரிதலில் ஏற்படும் கோளாறுகள் சில நேரங்களில் பிரச்சனைகளை ஏற்படுத்திவிடுகிறது. அப்படிப்பட்ட பிரச்சனைகள் தலைமுறை இடைவெளியின் விளைவு என்று சொல்லப்படும். இந்த விளைவுகளை நாம் சமுதாய வாழ்வின் பல நிலைகளில் கவனிக்க முடியும். அவைகளில் ஒன்றாக **அளவீடு** சம்பந்தப்பட்டதை நாம் கூறலாம். எப்படியெனில், மைல், பர்லாங், கெஜம், லிங்ஸ் போன்ற அளவுகள் முந்தின தலைமுறையைச் சேர்ந்தவர்களுக்குப் பழக்கப்பட்ட வார்த்தைகள். ஆனால், இந்த தலைமுறையினருக்குப் பெரிதாகத் தெரியாது. ஏதோ இந்தக் கோவிட் 19 –ன் புண்ணியத்தால் கெஜம் என்ற வார்த்தை அவ்வப்போது அலைப்பேசி வழியாக நம் காதுகளில் வந்து விழுகிறது. ஆனால், மற்ற வார்த்தைகளுக்குச் சான்சே இல்லை. அப்படியே கேள்விப்பட்டாலும் இதன் பொருள் புரிய வாய்ப்பு குறைவே.

சரி, நம்முடைய தலைப்பில் உள்ள **இரண்டு மைல் தூரம் போ** என்னும் அறிவுரை அல்லது கட்டளை இயேசு ஆண்டவருடைய போதனைகளில் இடம் பெற்றுள்ள ஒன்று. இப்போதனை தேக நலனுக்கான உடற்பயிற்சி சம்பந்தப்பட்ட

ஒன்றல்ல. எப்படியெனில், அழிந்து போகும் இந்த சரீரத்தை எப்படி எடுப்பாகவும், ஏற்றதாகவும் வைத்துக் கொள்ள வேண்டுமென்பதை எடுத்துரைக்க இயேசு இப்பூமிக்கு வர வில்லை. மாறாக, ஆத்தும ஆதாயமும், ஆன்ம ஆரோக்கியமும் தான் அவருடைய ஒரே இலட்சியம் [லூக். 19:10].

இச்சீரிய நோக்கத்தை சிரமேற்கொண்டுதான் பல சீரழிவு களுக்கும் மத்தியில் இப்பூமியில் ஊழியம் செய்தார். அந்த மூன்றரை ஆண்டுகளில் எத்தனை பிரசங்கங்கள் செய்தார் என்ற விபரம் நமக்குக் கொடுக்கப்படவில்லை. ஆனால், உலக வரலாற்றில் முன்னெப்போதும் செய்யப்படாத, இனி யாராலும் செய்ய முடியாத ஒரு பிரசங்கத்தைச் செய்தார் என்பது மாத்திரம் நிச்சயமானது. அந்த மகாப்பிரசங்கம் மத்தேயு 5,6,7 ஆகிய அதிகாரங்களில் பரவிக் கிடக்கிறது.

**மலைப்பிரசங்கம்** என்பது ஒரு காரணப் பெயர். அதற்கான காரணம் அது ஒரு மலைப்பாங்கான இடத்தில் செய்யப்பட்டதே. மலை என்று சொல்லும் போது, நாம் கழுத்து நோக அண்ணாந்து பார்க்கும் மலை போன்றது அல்ல அம்மலை. மாறாக, கலிலேயாக் கடல் பகுதியிலிருந்து பார்க்கக் கூடிய தூரத்தில் ஓர் அறுபது அடி உயரத்தில் அமைந்திருந்த ஒரு குன்றுப்பகுதி அவ்வளவே. அந்நாட்களில் இயேசு ஆண்டவருடைய கீர்த்தியைக் கேள்விப்பட்டு நாலா திசைகளிலிருந்து வந்த திரளான ஜனங்கள் ஆற அமர உட்கார்ந்து பிரசங்கியாகிய இயேசுவைக் காணவும், அவர் வாயின் வார்த்தைகளைக் கேட்கவும் தோதாக அமைந்த ஓர் உயர்ந்த நிலப்பரப்பு.

புகழ் மணம் வீசும் இப்பிரசங்கத்தின் ஊடே, ஓர் ஆறுமுறை **நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்** என்று கூறியுள்ளார் [மத். 5:22,28, 32,34, 39,44]. இதன் மூலம், அவர்கள் அதுகாறும் கைக் கொண்டிருந்த மோசேயின் பிரமாணங்களுக்கு, அவர்கள் அதுவரை கேள்விப்படாத அளவில் விளக்கிப் பொருள் கூறி, தன் அதிகாரத்தை நிலை நிறுத்தினார். ஜனங்கள் அவர் போதித்த விதத்தையும், போதனையின் ஆழத்தையும் கண்டு ஆச்சரியப் பட்டார்கள் [மத். 7:28,29].

பிரமிப்பூட்டும் இப்பிரசங்கத்தில், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று இயேசுவானவர் **ஐந்தாம் முறை** கூறின போது, உங்கள் சமுதாய வாழ்வில், பழிவாங்கும் போக்குக் இடம் கொடுத்து, ஒவ்வொன்றுக்கும் பதிலடி கொடுக்காமல் **தாழ்மை சிந்தை பெற்று, இணங்கிப் போகிறவர்களாக இருங்கள்** என்று போதித்தார். கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று

உரைக்கப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் கொடு. உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக் கொள்ள வேண்டு மென்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு. ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வரப் பலவந்தம் பண்ணினால் அவனோடு இரண்டு மைல் தூரம் போ என்றார். (மத்.5:38 – 42 ). மொத்தத்தில் உன்னிடத்தில் என்ன எதிர்பார்க்கப்படுகிறதோ அதைத் தாண்டி நீ செயல்படு கிறவனாக இரு என்றார். பலவந்தம் செய்தல் என்றால் கட்டாயப்படுத்துதல். இங்கே இயேசு என்ன சொன்னார், ஏன் சொன்னார் என்பதை மேலும் புரிந்து கொள்வதற்கு நமது வழக்கத்தின்படி இதன் பின்னணியை அறிந்துகொள்வது அவசியம்.

ஒரு சராசரி குடிமகனைக் கட்டாயப்படுத்திக் காரியமாற்றும் நடைமுறை மேதிய, பெர்சிய சாம்ராஜ்யத்தின் காலத்தில் முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. பிறகு, கிரேக்கர்களின் காலத்தில் முறைப்படி சட்டமாக்கப்பட்டு, ரோமருடைய ஆளுகையில் மேலும் இது விரிவுபடுத்தப்பட்டு கடுமை யாக்கப்பட்டது. இதன் மூலம் அரசாங்கத்தின் செய்தியைக் கொண்டு செல்லும் ஓர் அதிகாரியோ அல்லது அரசாங்கத்தின் பொறுப்பை ஏற்றுக்கொண்ட ஒருவரோ தங்கள் சார்பாகக் காரியமாற்ற யாரை வேண்டுமானாலும் கட்டாயப்படுத்த முடியும். இக்காரியத்தில் ரோம அதிகாரிகள் யூதர்களை அற்பமாக எண்ணி தவறாக நடத்தினர். தங்களோடு ஒரு கால்கடுக்க நடக்கவும், தங்கள் உடமைகளைச் சுமக்கவும் வைத்தனர். இதனிமித்தம் யூதர்கள் இந்த அதிகாரிகளை வெறுப்பாய் பார்த்தனர். ஆயினும் அவர்களுக்க வேறு வழியில்லை. சில நேரங்களில், ஒரு குறிப்பிட்ட தூரம் வரும்படி அழைக்கப்பட்டால் வேண்டா வெறுப்பாக ஒத்துழைப்புக் கொடுத்து விட்டு, அதற்கு மேல் வர முடியாது என்று அடம் பிடிப்பார்கள். இது பல பிரச்சனைகளுக்கு வழி வகுத்தது. இதை மனதில் கொண்டவராகவே இயேசுவானவர், என்னைப் பின்பற்றும் நீங்கள் அப்படி இருக்கக் கூடாது. ஒரு மைல் தூரம் வரப் பலவந்தம் பண்ணினால் அவனோடு இரண்டு மைல் தூரம் போக ஆயத்தமாகிக் கொள்ளுங்கள் என்று போதித்தார். **இதன் மூலம் உன்னிடத்தில் என்ன எதிர்பார்க்கப்படுகிறதோ அதற்கு மேல் செயல்பட நீ எப்பொழுதும் ஆயத்தமாயிரு** என்ற செய்தியை வலியுறுத்தினார். இந்த உண்மையை நாமும் நமது பக்தி வாழ்வில் தெரிந்து கொண்டு அதன்படி செய்வது அவசியம்.

வேதாகமத்தில் எதிர்பார்த்ததை விட அதிகம் செய்தவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களெல்லாரையும் பட்டியலிட இங்கே முடியாது. ஆயினும், சிலரை நாம் தெரிந்து கொண்டு, அவர்களிடமிருந்து நமக்கான சில பாடங்களைக் கற்றுக் கொள்ள இப்பொழுது முயற்சிப்போம்.

## I இரண்டு மைல் தூரம் சென்ற ரெபேக்காள்

இரண்டு மைல் தூரம் பக்தி வாழ்வில் நாம் செல்ல எப்போதும் ஆயத்தமாயிருக்க வேண்டுமென்று நமக்குப் பாடம் கற்றுக் கொடுக்க ஆயத்தமாயிருக்கும் முதல் நபர் ரெபேக்காள்.

விசுவாசிகளின் தகப்பன் என்றும், முற்பிதாக்களில் முதலாமவர் என்றும் அறியப்பட்டவர் ஆபிரகாம். இவன் தன் அந்திய காலத்தில் பெற்றெடுத்த ஏகசுதனும், நேச குமாரனுமாகிய ஈசாக்குக்கு பெண் பார்க்கும் கட்டம் வந்த போது, தன் ஊழியக் காரர்களில் பொறுப்பானவனாகிய எலியேசரை அழைத்து, சில **கடுமையான நிபந்தனைகளுடன்** தான் விட்டு வந்த தேசத்திற்கு அனுப்பினான். அப்படிச் சென்றவன் தனியாகச் செல்லாமல், தன் எஜமானுடைய செல்வத் திரட்சிக்குச் சான்றாகப் பத்து ஒட்டகங்களில் உச்சிதமான பொருள்களை ஏற்றிச் சென்றான் (ஆதி.24:2-10).

இந்த எலியெசயர் ஒரு வழியாக மொசப்பொத்தா மியாவிலிருந்த நாகோரின் ஊர் போய் சேர்ந்தான். ஆபிரகாம் வசித்த பகுதியிலிருந்து இந்த ஊர் சுமார் 435 (696 கிலோ மீட்டர்) மைல் தொலைவிலிருந்து. சாதாரணமாக, ஒட்டகமானது ஒரு நாளைக்கு சராசரியாக 25 மைல் தூரம் பயணிக்கும். அப்படி யானால், இப்பிரயாணம் ஒரு 17-18 நாட்கள் வரை எடுத்திருக்கும். எப்படியோ ஒரு வழியாகப் போய்ச் சேர வேண்டிய இடத்தை அடைந்து விட்டான். பிரயாணம் முடிந்து தன் எஜமானுக்காகச் செயல்படும் நேரமும் வந்துவிட்டது. அங்கே தேவனை நோக்கி மன்றாடித் தன் வேலையைத் துவக்கினான்.

எலியேசரின் ஜெபம் நமக்கு மூன்று உண்மைகளைச் சொல்லுகிறது. 1. அவன் தேவன் மீது கொண்டிருந்த நம்பிக்கை 2. அவனுடைய கொண்டிருந்த எஜமான் விசுவாசம். 3. தேவச் சித்தத்திற்கு ஒப்புக் கொடுக்கும் பாங்கு. தன் ஜெபத்தில் இந்த ஊர் பெண்கள் தண்ணீர் மொள்ள வரும் போது, நான் குடிக்க உன் குடத்தைச் சாய்க்க வேண்டும் என்று நான் சொல்லும்போது **குடி என்றும்,** உன் ஒட்டகங்களும் **குடிக்கும்படி வார்ப்பேன் என்று**

**சொல்லும் பெண் எவளோ** அவளே தேவ அனுக்கிரகம் பெற்றவள் என்று முடிவு செய்வேன் என்று குறிப்பிட்டான். கவனியுங்கள். குடி என்றும், உன் ஒட்டகங்களும் குடிக்கும்படி பார்ப்பேன் என்று **சொன்னால் அதுவே போதும்** என்பது எலியேசரின் எதிர்பார்ப்பு (ஆதி. 24:12-14).

பிறகு, தொடர்ந்து நடந்தது என்ன? துரவிலிருந்து ரெபேக்காள் தண்ணீர் மொண்டு வந்த போது, அவன் ஓடிப்போய் உன் குடத்திலிருக்கிற தண்ணீரில் கொஞ்சம் குடிக்கத் தர வேண்டும் என்றான். உடனே அவள் குடத்தை இறக்கிக் குடியும் என்று கொடுத்ததோடு, உன் ஒட்டகங்களும் குடித்துத் தீருமட்டும் அவைகளுக்கும் மொண்டு வார்ப்பேன் என்று சொல்லி, அவனோடிருந்த பத்து ஒட்டகங்களுக்கும் மொண்டு வார்த்தாள். ஒரு ஒட்டகமானது ஒரே சமயத்தில் குறைந்தது 100 லிட்டர் தண்ணீர் குடிக்கும். 17 நாள் நடைபயணத்துக்குப் பிறகு சற்று கூடுதலாகக் கூட இருக்கும். ஆக, 10 ஒட்டகங்களுக்கு 1000 லிட்டருக்கும் மேல் தேவைப்பட்டிருக்கும். ஒரு குடம் 15-20 லிட்டர் என்று கணக்குப் போட்டால் கூட ஒரு 60-70 குடம் தண்ணீரைத் துரவில் இறங்கி, ஏறிக் கொண்டு வந்து வார்க்க வேண்டும். அம்மாடியோவ்! எலியேசரே ஆச்சரியப்பட்டுப் போனான் (வசனம் 21).

அருமையானவர்களே! நாம் எப்படி? நம்மை கவனிக்கும் மற்றவர்கள் ஆச்சரியப்படும்படியான அளவில் நம்முடைய செயல்பாடுகள் அமைகின்றனவா? நற்குணம் கொண்ட ரெபேக்காளைத் தான் தேவன் தனக்காகத் தெரிந்து கொண்டதோடு, முற்பிதாக்களின் காலத்தில் ஏகபத்தினி விரதனாகிய ஈசாக்குக்கு மனைவியாக்கினார். அதுமாத்திரமல்ல, வேதாகமத்தில் உள்ள பெண்களில் சிறப்பான வாழ்த்துக்குச் சொந்தக்காரியாவுமானாள். ஆம், **எங்கள் சகோதரியே, நீ கோடாகோடியாய்ப் பெருகுவாயாக** என்னும் வாழ்த்து இவளுக்கானது. எதிர்பார்ப்பைத் தாண்டி செயல்படுகிறவர்களைத் தேவன் சும்மா விடுவதில்லை. நன்மையானவைகளையும், ஆசீர்வாதமானவைகளையும் அனுபவிக்கச் செய்கிறார். இவ்வுண்மையைப் புரிந்து நம் பக்தி வாழ்வை நடத்துவது நல்லது.

### II இரண்டு மைல் தூரம் சென்ற மக்கெதோனியா சபையார்

இரண்டு மைல் தூரம் பக்தி வாழ்வில் செல்ல நாம் எப்போதும் ஆயத்தமாயிருக்க வேண்டும் என்று நமக்குப் பாடம் கற்றுக்கொடுக்க இரண்டாவது ஆயத்தமாயிருப்பவர்கள் மக்கெதோனியா நாட்டு சபையார்.

முதலாவது, மக்கொதோனியா நாட்டு சபைகள் என்று இங்கு குறிப்பிடப்பட்டிருப்பது பவுலடியாரால் தன் ஊழியத்தின் பலனாக ஆரம்பித்த பிலிப்பி, தெசலோனிக்கே மற்றும் பெரேயா சபையார். இம்மூன்று சபையார் [யாக்.4:17] என்னும் யாக்கோபு ஆசிரியரின் வார்த்தைகளை அறிந்து உணர்ந்தவர்களாக வாழ்ந்துள்ளனர். எப்படியெனில், யூதேயாவிலிருந்த ஏழைக் கிறிஸ்தவர்களுக்குப் பொருளாதார நன்மைகள் தேவைப்பட்ட போது, பல சபைகள் அவர்களுக்கான நிதி திரட்டலில் ஈடுபட்டனர் [ரோமர் 15:26]. அவர்களுள் இந்த மக்தோனியா நாட்டுச் சபையாரும் அடக்கம். கலாத்தியா நாட்டுச் சபைகளுக்கும் இதில் சம்பந்தம் உண்டு [I கொரி 16:1,2]. இதற்காக அப்போஸ் தலர்களாலே ஒரு திட்டம் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது.

யூதேயாவிலும், எருசலேமிலும் உள்ள ஏழைக் கிறிஸ்தவர் களின் தேவைகள் சந்திக்கத் தீட்டப்பட்ட திட்டம் குறித்து கலாத்தியா நாட்டு சபைகளுக்கு எழுதும் போது, **அவனவன் தன் தன் வரவுக்குத்தக்கதாகக்** கொடுக்க வேண்டும் என்றார் பவுல். இத்திட்டத்தின் பேரில் செயல்பட வேண்டுமென்றுதான் மக்கெதோனியா சபையாரிடமும் எதிர் பார்க்கப்பட்டிருக்கும். ஆனால், இந்த மக்கெதோனியர்களோ, பிறருக்கு உதவி செய்வதை ஒரு **வாய்பாகக்** கருதாமல், அதைத் தாண்டி தேவனால் தங்களுக்கு அளிக்கப்பட்ட **கிருபையாக** எண்ணினர். இதினிமித்தம் தங்கள் உபத்திரவத்தையும் ஒரு பொருட்டாக எண்ணாமல் பரிபூரண சந்தோஷத்தோடே உதாரத்துவமாய் கொடுத்தார்கள். [II கொரி. 8:2].

வசனம் 3 சொல்வதைப் பாருங்கள். மேலும், அவர்கள் தங்கள் திராணிக்குத்தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க அவர்களே மனதுள்ளவர்களாயிருந்துள்ளார்கள். திராணிக்கு மிஞ்சி என்பது இயேசுவானவர் மலைப்பிரசங்கத்தில் உபதேசித்தது போல் எதிர்பார்க்கப்படுவதற்கு மேலான செயல்பாடுள்ள ஒரு மனப்பான்மை. இவர்களின் கொடுத்தல் குறித்தும், அப்படிக் கொடுப்பதற்காக அவர்கள் கொண்டிருந்த மனநிலை குறித்தும் பவுலடியார் 5-ம் வசனத்தில் இங்ஙனம் கூறியுள்ளார். மேலும், நாங்கள் நினைத்தபடி மாத்திரம் கொடாமல், தேவனுடைய சித்தத்தினாலேயே முன்பு **தங்களைத் தாமே கர்த்தருக்கும், பின்பு எங்களுக்கும்** ஒப்புக் கொடுத்தார்கள் என்று.

அன்பானவர்களே! இந்த மக்கெதோனியர்களால் இது எப்படி சாத்தியமாயிற்று என்று ஆராய்ச்சி செய்யத் தேவையில்லை. முதலாவது, தங்களைத் தாங்களே கர்த்தருக்கு ஒப்புக்

கொடுத்துள்ளார்கள். இந்த அடிப்படை உண்மை நமக்கு விளங்க வேண்டும். இது நமக்கு விளங்கவில்லையானால், ஆவிக்குரிய வாழ்வில் நாம் ஒரு போதும் விளங்கவே மாட்டோம். கர்த்தருக்கக் கொடுக்கிற காரியத்தில், மக்கெதோனியர் கற்றுக் கொடுக்கும் பாடத்தை நாம் கற்றுக் கொள்வோம். அதிகமான சரீர உழைப்பைக் கொடுக்க வேண்டியதாக இருந்தாலும், எதிர்பார்ப்பை விஞ்சி நாம் செயல்பட வேண்டுமென்று என்றைக்கோ வாழ்ந்த ரெபோக்காள் கற்றுத் தருகிறாள். இந்த மக்கெதோனியரோ உபத்திரவமும், தரித்திரமும் இருந்தால் கூட, இயேசுவின் போதனைப்படி எதிர்பார்ப்பை மிஞ்சி கொடுக்க வேண்டுமென்று கற்றுத் தருகிறார்கள். எப்படி? இதன் பிறகும் நமக்கு உணர்வு வரவில்லையென்றால் யாரும் எதுவும் செய்துவிட முடியாது. நரகம் தான் கதி.

## III இரண்டு மைல் தூரம் சென்ற ஊழியன் பிலிப்பு

இரண்டு மைல் தூரம் பக்தி வாழ்வில் செல்ல நாம் எப்போதம் ஆயித்தமாயிருக்க வேண்டும் என்று நமக்குப் பாடம் கற்றுக்கொடுக்க ஓடி வருபவர் பிலிப்பு ஊழியர்.

பிலிப்பு என்று கூறும்போது கூடவே வரும் கேள்வி எந்தப் பிலிப்பு என்பது. ஏனெனில், புதிய ஏற்பாட்டில் குறைந்தது மூன்று பிலிப்புகள் உள்ளனர். முதல் பிலிப்பு மகா ஏரோதுவின் சகோதரன் (மத். 14:3). இவன் ஒரு ஆகாவளி. எனவே இவனை விட்டு விடலாம். இரண்டாவது பிலிப்பு, இயேசுவால் தெரிந்து கொள்ளப்பட்ட 12 சீடர்களில் ஒருவன். பெத்சாயிதா ஊரானாகிய இந்த பிலிப்புவின் செயல்பாடு ஆரம்பத்தில் மெச்சும்படியாகவே இருந்தது. எப்படியெனில், கபடற்ற உத்தம இஸ்ரவேலனாகிய நாத்தான் வேலை கிறிஸ்துவண்டை கொண்டு வந்தது இவனே. இயேசுவின் பிரதான கட்டளை கொடுக்கப்பட்டதற்குப் பிறகு இவன் பற்றி நாம் அதிகமாகக் காண முடியவில்லை.

மூன்றாவது **பிலிப்பு** தான் இயேசுவின் உபதேசப்படி **இரண்டு மைல் தூரம் போன பிலிப்பு.** எருசலேமில் சபை ஆரம்பிக்கப்பட்ட பிறகு வந்த ஆரம்ப காலத்தில் சீடர்கள் தொகை பெருகின போது, சரீர நன்மைகள் பங்கிடப்படுவதில் **கிரேக்க விதவைகள் சரியாக** கவனிக்கப்படவில்லை என்ற முறுமுறுப்பு ஏற்பட்டது. இச்சூழல் அப்போஸ்தலருடைய நற்செய்திப் பணிக்குச் சவாலாக மாறியது. ஆகவே, இக்காரியங்களைக் கையாள்வதற்கு பரிசுத்த ஆவியும், ஞானமும், நற்சாட்சியும் கொண்ட ஏழுபேரைத் தெரிந்தெடுக்க முடிவு செய்யப்பட்டது. அப்படித் தெரிந்து கொள்ளப்பட்ட **ஏழு பேரில் ஒருவர் தான் இந்த பிலிப்பு.** இவன் தெரிந்தெடுக்கப்

பட்டது எருசலேம் சபையிலே உதவிக்காரர்களில் ஒருவனாக இருந்து செயல்படுவதற்கு. ஆகவே, இவனை உதவிக்காரர். பிலிப்பு என்று சொல்வது தான் சரியாக இருக்கும்.

ஆனால், வேதாகமம் இவனை **உதவிக்காரர் பிலிப்பு** என்பதைத் தாண்டி **சுவிசேஷகன் பிலிப்பு** என்று அழைக்கிறது (அப். 21:8). இது நமக்கு எதைச் சொல்லுகிறது? இந்தப் பிலிப்பு இவனிடத்தில் எதிர்பார்க்கப்பட்டதைத் தாண்டி தேவப் பணியாற்றியுள்ளான் என்று தானே. இவனோடு தெரிந்தெடுக்கப் பட்ட மற்ற ஆறு பேரில் ஸ்தேவான் இரத்த சாட்சியாக மரித்துவிட்டான் (அப்.7 - ம் அதி) மீதி ஐந்து பேர் உதவிக்காரர் வேலையைப் பவ்வியமாகச் செய்து கொண்டு அத்தோடு நிறுத்திக் கொண்டார்கள். ஆகவேதான், அவர்களைப் பற்றிய பேச்சு எதுவும் பெரிதாக இல்லை. ஆனால், இந்தப் பிலிப்பு கிறிஸ்துவின் நற்செய்திப் பணியில் கொண்ட ஈடுபாட்டின் காரணமாக அந் நாட்களில் யூதர்களால் ஓரக் கண்ணில் பார்க்கப்பட்ட **சமாரியாவுக்குச் சென்று** ஊழியப் பணி செய்து, **அநேகரை விசுவாசத்தில் வழி நடத்தினதோடு** நிற்காமல் ( அப்.8:5-13), தேவ ஏற்பாட்டின்படி **எத்தியோப்பிய மந்திரியையும்** ஓடிப்போய் சந்தித்து அவனையும் ஞானஸ்நானத்தின் மூலம் கிறிஸ்துவுக்குள் கொண்டுவந்தான் (அப்.8:26-40). அப்பவும் திருப்திபடாமல் ஊர் திரும்பி வருகிறபோது, வழியில் காணப்பட்ட சகல பட்டணங் களிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துள்ளான் (அப். 8:40). அடேங்கப்பா! இந்த நற்செய்திப் பித்தனை நாம் எப்படி **உதவிக்காரன்** என்ற கூண்டுக்குள் அடைக்க முடியும்?!

அருமையானவர்களே! இயேசு ஆண்டவர், ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் போகப் பலவந்தம் பண்ணினால் அவனோடு இரண்டு மைல் தூரம் போ என்று தான் சொன்னார். ஆனால், நம் பிலிப்பு நற்செய்திப் பணியை ஆலாய்ப் பறந்து பறந்து செய்துள்ளாரே! நாம் எப்படிப் பட்டவர்களாய் உள்ளோம்? வெற்றிலை, பாக்கு வைத்து யாராவது அழைக்கட்டும் என்றல்லவா காத்துக் கொண்டுள்ளோம்? நம்முடைய நினைப்பிலும், நிலையிலும் உடனடி மாற்றம் தேவை. தேவனுக்கும், தேவனுடைய குமாரனுக்கும், குமாரனுடைய சபைக்கும் எதிர்பார்ப்பைத் தாண்டி செயல்படுகிறவர்கள் தான் இன்றைக்கு அவசரமாகத் தேவை.

ஆகையால், இந்த உண்மைகளைப் புரிந்து நம் பக்தி வாழ்வை நடத்தினால் இம்மையிலும், மறுமையிலும் ஆசீர்வதிக்கப்பட்ட வர்களாக இருப்போம்! ஆமென்!! ✝

# சத்தியத்தை நேசித்தல்

Bro. J.C. சோட்

**சி**லருக்கு சத்தியத்தைப் போதிப்பது மிக எளிமையானது. தேவனுடைய சித்தத்தை ஏற்றுக் கொள்வதில் அவர்களுக்கு எந்த சிரமமும் இல்லை. அவர்களுக்கு சத்தியம் அறிவிக்கப்பட்ட வுடனேயே அவர்கள் அதை ஏற்றுக் கொள்கிறார்கள். சத்தியத்திலிருந்து தப்பியோட அவர்கள் சாக்குபோக்குகள், வாக்கு வாதங்கள் போன்ற எந்த முயற்சிகளிலும் ஈடுபடுவதில்லை. சத்தியம் அவர்களுக்கு முன்பாக வைக்கப்படும்போது, இப்படியாக இருக்கிறதா என்று சீர்தூக்கிப்பார்த்து காரியங்கள் அவர்கள் சத்தியத்திற்கு கீழ்ப்படிய ஆயத்தமாகிறார்கள். ஆனால், அவர்கள் ஏன் சத்தியத்தை மிக எளிதாக ஏற்றுக் கொள்கிறார்கள்? அவர்கள் நேர்மை யற்றவர்களா? அவர்களுக்கு உள்ளார்ந்த நோக்கம் ஏதாவது இருக்கிறதா? தேவவாக்கியங்களை சரிவர அவர்கள் புரிந்து கொள்ளவில்லையா? இக்கேள்விக்கான பதில் அதற்கு நேர் எதிரானதாகும். நாம் சத்தியத்தை நேசிக்க நேர்ந்த மக்களைப்பற்றி பார்த்துக் கொண்டிருக்கிறோம், இது இவ்வுலகில் பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

சத்தியத்தைத் தேடிக் கொண்டிருக்கிற ஒருவரை சந்தித்து அவருக்கு சத்தியத்தை அறிவித்து அவரை ஆதாயப்படுத்துவது எத்தனை சந்தோஷமான காரியமாயிருக்கிறது. எல்லோருக்கும் அந்த ஆசை ஏன் இருக்கக்கூடாது? எல்லோரும் சத்தியத்தை ஏன் நேசிக்கக்கூடாது? பொருளாதாரமாக இருந்தாலும் சரி, விஞ்ஞான மாக இருந்தாலும் சரி, மத சம்மந்தமாக இருந்தாலும் சரி இறுதியில் சத்தியம் தான் கணக்கில் எடுத்து கொள்ளப்படும். பொய், நேர்மையான முறையில் நம்பப்பட்டாலும் கூட அது உதவாது. மாறாக, விவேகமான ஒரு நபர், நேர்மையான ஒரு நபர் உண்மையைத்தான் தேடுகிறவராயிருக்கிறார். நமக்கு வேதாகமத்தில் தேவனுடைய வார்த்தை என்னும் உண்மை அதாவது சத்தியம் இருக்கிறது. அதனிடத்தில் மரியாதையுடனும், அன்புடனும் வருகிறவர்கள் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்வார்கள். அவர்கள் சத்தியத்தை நேசிக்கிற மற்றவர்களோடு சேர்ந்து கொள்வார்கள், ஏனென்றால், சத்தியம் ஒரு போதும் குழப்பத்தை ஏற்படுத்தாது. தவறாக வழி நடத்தாது, சத்தியம் ஒரு

போதும் அதை ஏற்றுக்கொள்கிறவர்களை தவறான திசையில் வழிநடத்தாது. மாறாக, சத்தியம் அதை நேசிப்பவர்களை ஒன்றிணைத்து, அவர்கள் ஒருமித்த கருத்துடன் பணியாற்ற சூழ்நிலையை சாத்தியமாக்கும்.

எல்லோரும் உண்மை அல்லது சத்தியத்தை நேசிப்பதில்லை என்பது துக்ககரமான ஒரு காரியமாகும். அதிலும் குறிப்பாக, மத சம்பந்தமான காரியங்களில் ஜனங்கள் உண்மை அல்லது சத்தியத்தை நேசியாமலிருப்பது மிகுந்த வேதனை அளிக்கிறது. அதனால் தான் ஜனங்கள் மனிதனால் உண்டாக்கப்பட்ட உபதேசங்கள் மற்றும் தவறான பாரம்பரியங்களுக்குப் பின் செல்கிறார்கள். அவர்கள் சற்று நின்று யோசித்தால் இத்தகைய காரியங்கள் சரியானதாக இருக்க முடியாது என்பதை உணர்ந்து கொள்வார்கள். ஆனால், அவர்கள் இவ்விதத்தில் தான் போக வேண்டுமென்று தங்கள் மனதில் நியமித்துக் கொண்டு அவர்கள் எதைச் செய்கிறார்கள்களோ அதில் மகிழ்ச்சியாயிருக்கிறார்கள்.

இதே ஜனங்கள் வேதாகமத்தை படிப்பதற்கு நேரம் ஒதுக்க விருப்பமில்லதவர்களாகத்தான் இருக்கிறார்கள், சொல்லப் போனால் தேவனுடைய வார்த்தையோடு நேரடியாக முரண் படுகிற காரியங்களை அவர்கள் போதிக்கிறார்கள். அவர்கள் தங்கள் உணர்வுகளில் நம்பிக்கை வைத்து எல்லா சபைகளும் ஒன்று தான் என்று தங்கள் செயல்பாடுகளை நியாயப் படுத்துகிறார்கள். அவர்கள் மனம் சத்தியத்திற்கு அடைக்கப்பட்டி ருக்கிற படியால் எளிமையான சத்தியத்தைக் காட்டி அவர்களை ஏற்றுக் கொள்ளச் செய்வதென்பது அசாத்தியமான ஒன்றாக மாறிவிடுகிறது. அவர்களுடைய பிரச்சனை என்ன வென்று பார்க்கும் போது அவர்கள் சத்தியத்தை நேசிக்கா மலிருப்பது தான் பிரச்சனையாக இருக்கிறது. அவர்கள் இழந்து போன நிலையில் இருக்கிறார்கள், அவர்களுடைய நித்திய அழிவை தடுக்க நம்மால் பெரிய அளவில் ஒன்றும் செய்ய முடியாது

இந்த ஜனங்கள் எதை நம்புகிறார்களோ அதற்காக மிகுந்த பக்தி வைராக்கியத்துடன் வேலை செய்கிறார்கள், அவர்கள் சத்தியத்தை நேசிப்பதாக உங்களிடம் சொல்லலாம். ஆனால், அவர்கள் உண்மையில் சத்தியத்தை நேசிப்பதில்லை. இது எப்படி நமக்குத் தெரியும்? அவர்கள் வேதாகமத்தை திறந்த மனதோடு படிக்க மறுப்பதை வைத்தே நாம் புரிந்து கொள்ளலாம். சத்தியத்தை நேசித்து. அதற்குக் கீழ்ப்படிய முயற்சிக்கிறவர்களுக்கு மறைப்பதற்கு ஒன்றுமில்லை. அவர்கள் கேள்விகளைக் கண்டு பயப்படுவதில்லை. சத்தியத்தை ஏற்றுக்கொள்ளாதவர்களோடு சேர்ந்து கூட வேதவாக்கியங்களை படிப்பதற்கு அவர்கள்

தயங்குவதில்லை. சத்தியத்தை நேசிக்காதவர்கள் கேள்விக் கணைகளைக் கண்டு துவண்டுபோகிறார்கள். அவர்கள் கற்றுக் கொள்கிறவைகள் ஏற்கனவே அவர்கள் ஏற்றுக் கொண்டவைகளுக்கு முரண்பாடாக இருக்கிற படியால் அவர்கள் அதிகமாக பயப்படுகிறார்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்கேயருக்கு இவ்விதமாக எழுதினார். அன்றியும் சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையையும், நாம் அவரிடத்திலே சேர்க்கப்படுவதையுங் குறித்து, நாங்கள் உங்களை வேண்டிக் கொள்ளுகிறது என்னவென்றால் ஒரு ஆவியினாலாவது வார்த்தையிலாவது, எங்களிடத்திலிருந்து வந்தாய்த் தோன்றுகிற ஒரு நிருபத்தினாலாவது கிறிஸ்தவனுடைய நாள் சமீபமாயிருக்கிறதாகத் சொல்லப்பட்டால், உடனே சஞ்சலப்படாமலும் கலங்காமலும் இருங்கள். எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம் போகாத படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாசத் துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவ மனுஷன் வெளிப்பட்டாலொழிய அந்த நாள் வராது. அவன் எதிர்க்கிறவனாயும், தேவனென்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்திகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல் உட்கார்ந்து, தன்னைத்தானே தேவன் என்று காண்பிக்கிறவனாயும் இருப்பான். நான் உங்களிடத்தில் இருந்த போது இவைகளைச் சென்னது உங்களுக்கு ஞாபகமில்லையா? அவன் தன் காலத்திலே வெளிப்படும்படிக்கு இப்பொழுது அவனைத் தடை செய்கிறது. இன்னதென்றும் அறிந்திருக்கிறீர்களே. அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது; ஆனாலும் தடை செய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படும் முன்னே வெளிப்படாது. நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அளித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார். அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாததானுடைய செயலின் படி சகல வல்லமையோடும், அடையாளங்களோடும், அற்புதங்களோடும், கெட்டுபோகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்பட்த்தக்கதாய் சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கீகரிக்காமற் போனபடியால் அப்படி நடக்கும். ஆகையால், சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிறயாவரும் ஆக்கினைக் குள்ளாக்கப்படும்படிக்குத் அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகத் கொடிய வஞ்சகத்தை தேவன் அவர்களுக்கு அனுப்புவார் [II தெச.2:1−12].

**தொடரும்...**

பெண்கள் பகுதி

## காலங்காலமாய் ஏன் இயேசு விரும்பப்படத்தக்கவராய் இருக்கிறார்?

Sis. ரேச்சல் இராஜநாயகம்

**நா**ன் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும் போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்வேன் என்றார்.(யோவா 12:32) இந்த அற்புதமான வார்த்தைகள் இயேசு கிறிஸ்து இந்த உலகத்தின்மேல் வைத்திருந்த அளவில்லா அன்பை வெளிப்படுத்துகிறது. ஆம், இயேசு காலத்துக்கும் விரும்பப்படத்தக்கவர்.

I. மனிதனுடைய வியக்கத்தக்க வேலைகளும், இயற்கையும் அநேகரை ஈர்க்கிறது. அன்றைய நாட்களின் உலக அதிசயங்களான தொங்குதோட்டம், அலெக்சாந்திரியா பட்டணத்து கலங்கரை விளக்கு, எகிப்தின் பிரமிடுகள், எபேசுவின் தீனாள் கோயில் போன்றவைகள். இன்னும் வானளாவிய கட்டங்கள், பெருங்கடல்கள், எரியும் பாலை வனம் இன்னும் பல. ஆனால், காலப்போக்கில் அவைகள் அழிந்து நொறுங்கி காணாமல் போய்விடும், போயும் விட்டது.

### II. இயேசு காலத்துக்கும் ஈர்க்கப்படத்தக்கவர்

மூதாதையர் பெருமை, அரசியல் செல்வாக்கு பொருளாதாரம் மற்றும் பொருளாதார பெருமைகள் எதுவும் இல்லாத காரணத்தால் அவருடைய முந்தைய தலைமுறையினர் தாழ்மையான பாரம்பரியத்தைக் கொண்டவர்கள். அவருக்கு அரசியல் தோரணை கிடையாது. இராஜவாவதை மறுத்து விட்டார் (யோவான் 6:15) பூமிக்கு வந்த நோக்கத்தை வெளிப்படுத்திய பிறகு ஆபத்தான சமுதாயத்தில் நடமாடவேண்டியதாயிற்று.

மற்றவர்களால் விரும்பப்படத்தக்க ரூபம் அவருக்கு இல்லை. (ஏசாயா: 53 : 1–3). ஆனால், ஆயிரக்கணக்கான திரள் கூட்டம் எப்போதும் அவருக்குப் பின்சென்று, அவர் வாயிலிருந்து புறப்படும் வார்த்தைகளால் கவரப்பட்டனர்.(மத்:7.28,29,5000, மாற் 6:44).

நாசரேத்திலிருந்து நன்மை வருமா? என்று கேட்குமளவுக்கு இருந்த நாசரேத்திலிருந்து தச்சன் மகனாக, சத்திரத்தில் இடமில்லாமல் முன்னிலையில் பிறந்தார். பலி செலுத்துவதற்கு ஆட்டுக்குட்டி வாங்க இயலாமல் மரியாள் புறாவை பலி செலுத்தினாள் II கொரி: 8:9-ல் அவர் ஐசுவரியமுள்ளவரா யிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரிய வான்களாக அவர் தரித்திரரானார்.

III. **ஏன் இயேசு காலத்தால் ஈர்க்கப்படத்தக்கவராயிருக்கிறார்?**

ஏனென்றால், தேவன் மனுக்குலத்தின் மீது கொண்டிருந்த அன்பு முழுவதும் அவருக்குள்ளிருந்து தான் வெளியாக்கப் பட்டது. (யோ3:16). தேவன் தன் குமாரனையே ஈவாகக் கொடுத்த இந்த அன்பிற்கு ஈடு இணை எதுவுமேயில்லை.

இயேசு விரும்பப்படத்தக்கவர். ஏனென்றால், அவர் பேசியவைகள் இது வரை யார் ஒருவராலும் பேசப்படாதைவைகள் (யோவான் 7:46).

ஜீவ வசனங்கள் வழங்கியதில் அவரே தனிச்சிறப்பு கொண்டவர் (யோ7:46)

மேலும், அவர் செய்த காரியங்களான பல அற்புதங்கள், மரித்தோரை உயிரேடு எழுப்பினது, கடல்கள் அமைதியானது, சுகவீனர்கள் சொஸ்தமாக்கப்பட்டார்கள். இவைகளால் அவர் காலங்காலமாய் ஈர்க்கப்படத்தக்கவராயிருக்கிறார்.

பின்னும், மற்றவர்களோடு அவர் செயல்பாட்டைப் பார்க்கும்போது துயரப்படுவோரோடு சேர்ந்து அழுதார். சந்தோஷப் படுகிறவர்களோடு சந்தோஷப்பட்டார் (திருமணம்)சுகவீனம் மற்றும் பாடுபடுகிறவர்களுக்காக இரங்கினார். தன் விரோதிகளுக்காக ஜெபம் செய்தார், முற்றிலும் சுயநலம் இல்லாதாவராக இருந்தார்.

அவருடைய வாழ்க்கையைப் பார்க்கும் பொழுது பாவமே இல்லாத பரிசுத்தவான், உண்மை, நேர்மை, தாழ்மை, ஞானம், ஒரு நோக்கத்திற்காக தன்னை அர்ப்பணித்தல், குற்றமே கண்டுபிடிக்கப்படமுடியாத ஒரு குணாதிசயம், புரிந்து

கொள்ளுதல், பலம், தெய்வீக வல்லமை, பயமற்ற தைரியம், விடாமுயற்சி, அசைக்கமுடியாத ஒரு நிலைப்பாடு, மனிதநேயம், நீதியை மட்டும் விரும்புவது, தீமையை வெறுப்பது, அன்பு காட்டப்படாதவர்கள் மீது அன்பு காட்டுதல் போன்ற இவைகளினால் இயேசு எக்காலத்திலும் ஈர்க்கப்படத்தக்கவராயிருக்கிறார்.

எந்தவொரு மனிதனைக் காட்டிலும் இயேசு மேலானவர், அவர் தேவமனிதர். 2000 ஆண்டுகளாக கோடிக்கணக் கானவர்கள் அவரால் ஈர்க்கப்பட்டிருக்கிறார்கள். இயேசுவண்டை வந்து அவரோடு ஐக்கியப்பட்டபின் யாருமே தன் பழைய நிலையில் இருக்கமாட்டார்கள். கட்டாயம் ஒரு மாற்றத்தை அவர்களிடம் காணமுடியும்.

கர்த்தருக்குள் பிரியமான சகோதரிகளே! நமதாண்டவரும், அருமை இரட்சகருமாயிக்கிற இயேசுவைப்பற்றி இம்மாதம் வாசிக்கிறோம். எவ்வளவு ஒரு வல்லமை, சகல அதிகாரமும் கொண்ட இயேசுவை நாம் எப்படிப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்? கிறிஸ்துவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கூடவது (பிலி:2:5) என்றால் நம் நிலைமை எவ்வாறு இருக்கிறது? அவரைப்போல் இல்லாவிட்டால், அவர் சொன்னபடி செய்யாவிட்டால் நம்மை அவர் பிதாவின் கையில் ஒப்புக் கொடுக்கமாட்டார். வேதாகமமும், கிறிஸ்துவமும் இன்றைக்கு விளையாட்டாகப் போய்விட்டது. எல்லோரும், எல்லாவற்றோடும் சமத்துவமும், சமரசமும் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். ஒன்றாக சேர்ந்து நரகாக்கியை அனுபவிப்பது தான் நடக்கப் போகிறது. வேண்டாம் சகோதரிகளே, இயேசுவண்டை நிற்போம். அவர் பேச்சை கேட்போம் அவர் எல்லாக் காலத்திலும் விருப்பப்படத்தக்கவராயிருக்கிறார். எல்லாவற்றையும் அவருடைய பாதத்திலே வைத்து விட்டு, என்ன செய்யச் சொல்கிறாரோ? எங்கே போகச் சொல்கிறாரோ அதைச் செய்தால் என்ன? பெருமை தடுக்கிறதா? அவர் சித்தம் செய்தால், நம் வாழ்வு இனிமையாகவும், ஆசீர்வாதமாகவும், மிகவும் அன்புள்ளதாகவும், பிரயோஜனமுள்ளதாகவும் இருக்கும். அவரில் நம்பிக்கையாயிருப்போம். அவருக்கே கீழ்ப்படிவோம்! ஆமென்!! ✝

வாலிபர் பகுதி

# பொறுமையோடு கீழ்ப்படிதல்

**Dr. ஏபில் நாயகம்**

**கி**றிஸ்தவர்களாக நாம் வாழும்பொழுது, தேவனைப் பிரியப்படுத்தும் காரியங்களைச் செய்வதிலும் சிந்திப்பதிலும் நிச்சயம் கவனம் கொள்ளவேண்டும். தேவனுக்கும் நமக்கும் உள்ள உறவு, பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் உள்ள உறவைப் போன்றது. பிள்ளைகள் பெற்றோரை பிரியப்படுத்த வேண்டுமானால், கீழ்ப்படிதல் உள்ளவர்களாக இருக்கவேண்டும். அதை வேதமும் அறிவுறுத்துகிறது. எபே 6:1ல் **பிள்ளைகளே! உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம்**'' என்று வசனம் இருப்பதை வாசிக்க முடியும். பிதாவாகிய தேவனுக்கு நாம் பிள்ளைகளாக இருக்கிறோம். தேவனும் தம்முடைய பிள்ளைகளாகிய நாம் அவருக்கு கீழ்படிய வேண்டும் என்று விரும்புகிறார். அதை அவர் எதிர்பார்க்கிறார்.

உதாரணமாக மோசேயை எடுத்துக் கொள்வோம். கன்மலையை இரண்டுதரம் அடித்ததற்காக, அப்படி அடித்தது மோசேவாக இருப்பினும் கீழ்படியாமைக்கான தண்டனை தேவனால் கொடுக்கப்பட்டது (எண்ணாகமம் 20 அதிகாரம்). கீழ்ப்படிதல் என்று சொல்லும் பொழுது, அதற்கு மாற்று ஒன்றும் இல்லை. ஒரு நாணயத்திற்கு இருபக்கங்கள் இருப்பது போல கீழ்ப்படிதலை பொருத்தவரைக்கும் இரண்டு நிலைப்பாடு தான். ஒன்று கீழ்ப்படிதல், மற்றொன்று கீழ்ப்படியாமை. ''**பாதி அல்லது அரைகுறை கீழ்ப்படிதலும், கீழ்ப்பாயாமையே**'' எனவே கீழ்படிதலுக்கு ''**இடைநிலை**'' ஒன்றும் இல்லை.

நம் அனுதின வாழ்க்கையில் நாம் தேவனுடைய வசனங்களுக்கு முழுமையாக கீழ்ப்படியாமல் போவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளது. அதை நாம் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். அதற்காக அதை அப்படியே விட்டு விடவும் கூடாது. அதை எப்படி சரிசெய்வது என்று இஸ்ரவேலின் முதல் ராஜா சவுலின் வாழ்க்கையில் இருந்து சில காரியங்களை கற்றுக் கொள்வோம். இஸ்ரவேல் ஜனங்கள் நியாயாதிபதிகளுக்குப் பின் தங்களை ஆளவும், நியாயம் விசாரிக்கவும் ஒரு ராஜா வேண்டும் என்று தேவனிடம் கேட்டார்கள். தேவனும் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க சவுலை ராஜாவாக ஏற்படுத்தினார் (I சாமு. 9:17).

பத்தாம் அதிகாரம் எட்டாம் வசனத்தில் சாமுவேல் மூலம் தேவன் சவுலுக்கு ஒரு கட்டளை கொடுக்கிறதை வாசிக்க முடியும். நீ எனக்கு முன்னே கில்காலுக்கு இறங்கிப் போ; சர்வாங்க தகனபலிகளை சமாதான பலிகளையும் செலுத்தும்படிக்கு நான் உன்னிடத்தில் வருவேன். நான் உன்னிடத்தில் வந்து நீ செய்ய வேண்டியதை உனக்கு அறிவிக்கும் மட்டும் **ஏழு நாள்** காத்திரு என்றார்.

அந்த ஏழு நாட்கள் சவுலுக்கு முக்கியமான ஒரு பரீட்சை காலம். தேவனை முழுமையாக விசுவாசிக்கவும் தன் கிரியைகளின் மேல் சாராமல் பொறுமையாய் தேவனுக்கென்று காத்திருக்கவும் இந்த ஏழு நாட்கள் சவுலுக்குக் கொடுக்கப்பட்டது. நடந்தது என்ன என்பதை அனைவரும் அறிவோம்.

பெலிஸ்தர் நிமித்தம் ஏற்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் செய்தது என்ன? அப்பொழுது சவுல் சர்வாங்க தகனபலியையும் சமாதான பலிகளையும் என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்று சொல்லி, சர்வாங்க தகனபலியை செலுத்தினான். இப்படி சவுல் செய்ததினால் தேவன் சாமுவேலை கொண்டு கொடுத்த கட்டளைக்கு கீழ்ப்படியாமல் போனான். சவுல் கீழ்ப்படியாமல் போனதினால் சாமு. I 13:14 அவனுடைய ராஜ்யபாரம் நிலை நிற்காது என்று சாமுவேல் கூறுவதை வாசிக்க முடியும்.

நடந்த காரியங்களை நன்றாக கவனிக்கும்போது சவுல் கீழ்ப்படியவில்லை என்று சொல்ல சற்று யோசிக்கத்தோன்றும். ஆனால், தேவனுடைய பார்வையில் அவன் கட்டளைக்கு கீழ்படியவில்லை சாமு 13:8 வாசித்தால் அவன் தனக்கு சாமுவேல் குறித்த காலத்தின்படி 7 நாள் மட்டும் காத்திருந்தான் என்றுதான் வசனம் சொல்லுகிறது. ஆனால், அது அரைகுறையான கீழ்ப்படிதல். ஏனென்றால், தனக்கு கொடுக்கப்பட்ட கட்டளையை முழுமையாகப் பின்பற்றவில்லை. ஏழுநாள் காத்திருந்தான். ஆனால், பலிகளை செலுத்த சாமுவேல் வரவேண்டும் என்பதுதான் கட்டளை. ஏழு நாள் காத்திருந்த சவுல் சாமுவேல் வரும் வரை காத்திருக்கவில்லை. பரிதாபமான ஒரு நிலை அல்லவா இது. இன்னும் கொஞ்ச நேரம் காத்திருந்து இருக்கலாமே என்று தான் எண்ணத் தோன்றுகிறது. ஆனால் அந்த கொஞ்சத்தையும் செய்தால்தான் **கீழ்ப்படிதல் முழுமை அடைகிறது .**

பொறுமை என்பது கிறிஸ்தவர்களுக்கு இருக்கவேண்டிய பண்புகளில் மிக முக்கியமான ஒன்று. சவுல் தன் பொறுமையை இழந்து அதனிமித்தம் கீழ்ப்படியாமல் போனால் சவுல் பொறுமை இழந்தது ஏன்? தன்னைச் சுற்றி இருக்கிற ஜனங்கள் பயந்து ஓடினார்கள், பெலிஸ்தரின் ராணுவம் பெரிதாய் இருந்தது; வருவேன் என்று சொன்ன சாமுவேல் இன்னும் வரவில்லை என்று காரணங்கள் சொல்ல முடியும். ஆனால், இந்த காரணங்கள் அனைத்தும் கீழ்ப்படியாமைக்கான சாக்குப்போக்காகவே இருக்கிறது. தன்னை ராஜாவாக ஏற்படுத்தியது தேவன் ஆயிற்றே! எனவே, தேவன் சொன்னபடி நடக்கும் என்று தீர்க்கமாய் நம்பாமல் போனபடியால் பயம் ஏற்பட்டது. பயத்தினிமித்தம் பொறுமையை இழந்தான். பொறுமையை இழந்ததினிமித்தம் கீழ்ப்படியாமல் போனான்.

நம் வாழ்க்கையிலும் நாம் முழுமையாக கீழ்ப்படியாமல் போவதற்கு வாய்ப்புகள் அதிகம் உண்டு. சவுலை நினையில் கொள்வோம். நம்மைச் சுற்றி நடப்பதை வைத்து நம் கீழ்ப்படிதலை முடிவு செய்ய வேண்டாம். நமக்கு ஏற்படுகிற பயத்தை வைத்தோ அல்லது இக்கட்டான சூழ்நிலைகளை வைத்து நம் கீழ்ப்படிதலை முடிவு செய்ய வேண்டும். மாறாக, நமக்கு கற்பனைகளைத் தந்திருப்பது தேவன். அவர் சர்வ வல்லமை உள்ளவர். அவர் வாக்கு மாறாதவர் என்ற தீர்க்கமான நம்பிக்கையை நம் கீழ்ப்படிதலுக்கு அடித்தளமாக வைப்போம் அப்பொழுதுதான், **அரைகுறையான** கீழ்ப்படிதல் உள்ள பிள்ளைகளாயிராமல் முழுமையாய் கீழ்ப்படிகிற பிள்ளைகளாய் இருப்போம்

மூன்று காரியங்களை எப்பொழுதும் நினைவில் கொள்வோம்.

உண்மையான கீழ்ப்படிதலை தேவன் எதிர்பார்க்கிறார்

முழுமையான கீழ்ப்படிதலுக்குப் பொறுமை மிக அவசியம்

கீழ்ப்படியாமைக்கான தண்டனை நிச்சயம் உண்டு

தேவன் நம்மை ஆசீர்வதிப்பாராக!

✝

சிறுவர் பகுதி

# காணாததை விசுவாசித்தல்

Dr. பிரெய்ஸி

ஹாய் குட்டீஸ்! நீங்களெல்லாரும் நல்லபடியாக வீட்டில் பெற்றோர்களை தொந்தரவு செய்வதில்லை என்று நம்புகிறேன். நீங்களெல்லாரும் பள்ளிக்கூடத்தையும், உங்கள் நண்பர்களையும் குறித்து அதிகமாக நினைப்பீர்கள் என்று நான் அறிவேன். எல்லாம் நன்மைக்கே என்று நம்புங்கள். இந்தக் கொடிய கொள்ளை நோயிடமிருந்து தேவன் உங்களைப் பாதுகாக்க வேண்டுமென்று கடுமையாக ஜெபியுங்கள்.

இந்த மாதம் நீங்களெல்லாரும் எப்படிப்பட்ட விசுவாசத்தை உடையவர்களாய் இருக்க வேண்டுமென்று இயேசு கிறிஸ்து விரும்புகிறார் என்பதைப் பற்றி உங்களோடு பேசப்போகிறேன். விசுவாசம் என்பது, பிள்ளைகளே நாம் காணாததை நம்புவதாகும் நீங்களெல்லாரும் எவ்வித சந்தேகமும் இல்லாத விசுவாசத்தை கொண்டிருக்க வேண்டும். எவ்வித சந்தேகமுமின்றி இந்த கொடுமையான காலம் தேவனால் எடுத்துப்போடப்படும் என்று நாம் விசுவாசிக்க வேண்டும்.

மத்தேயு 17:14–20 வசனங்களில் இயேசுவின் சீஷர்களால் பிசாசை துரத்த முடியாததை நாம் பார்க்கிறோம். அவர்களுடைய சந்தேகத்தைக் குறித்தும் அற்ப விசுவாசத்தைக் குறித்தும் இயேசு துக்கமடைந்தார் என்றும் பார்க்கிறோம். அருமையான பிள்ளைகளே, 20 ம் வசனத்தில் இயேசு கிறிஸ்து அவர்களைப் பார்த்து, கடுகு விதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையைப் பார்த்து இவ்விடம் விட்டு அப்புறம்போ என்று சொல்ல அது அப்புறம் போம் என்று சொன்னார். அன்புப் பிள்ளைகளே உங்கள் விசுவாசம் எவ்வித சந்தேகமும் மின்றி உறுதியானதாக இருக்க வேண்டும். அதோடு தேவசித்ததை உங்கள் வாழ்வில் செய்ய தேவனிடம் கடுமையாக ஜெபித்து, உங்கள் வாழ்வில் அவருடைய சித்தமே சிறந்தது என்று விசுவாசிக்க வேண்டும்.

எனவே பிள்ளைகளே! வாழ்க்கையில் எல்லாவற்றையும் அதிகமான விசுவாசத்தோடு செய்யுங்கள். அந்த விசுவாசம் எவ்வித சந்தேகமும் சாக்குபோக்கும் இல்லாததாக இருக்க வேண்டும்.நற்கிரியைகளைச் செய்து நம் அன்புள்ள தேவனை மகிமைப்படுத்தி எவ்வித சந்தேகமில்லாமல் அவரிடம் ஜெபியுங்கள். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிக்கட்டும்.

**அன்புடன்,**
**உங்கள் பிரெய்ஸி அக்கா.**

**சிறுவர்களுக்கான வேத வினாப்போட்டி (நியாயாதிபதிகள்)**

- அச்சிறுவனுக்கு என்ன நோய் இருந்தது?
- பிசாசுகள் துரத்தப்பட கொண்டு செல்லப்பட்ட அச்சிறுவன் யார்?
- பிசாசை துரத்தியது யார்?
- ஏன் சீசர்களால் அச்சிறுவனை சுகப்படுத்த முடியவில்லை?
- இயேசு விசுவாசத்தை பற்றி சீசர்களிடத்தில் என்ன சொன்னார்?
- விசுவாசத்தோடு எவைகளும் சேர வேண்டும் ? வசனம் 21

## பெற்றுக் கொள்

**விதையை விதைத்து அதனால் வரும் அறுவடையைப் பெற்றுக் கொள். முயற்சி எடுத்து அதனால் வரும் வெற்றியை பெற்றுக்கொள். தீமையை வெறுத்து அதனால் வரும் நன்மையை பெற்றுக்கொள். சாத்தானை சத்தியத்தினால் வீழ்த்தி அதனால் வரும் ஜெயத்தை பெற்றுக்கொள்!**

# வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு...

கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் **திருமறை ஆசான்** முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன், அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும்.

**நெகேமியா புத்தகத்தில் தேடிக்கண்டுபிடியுங்கள்**
**(9– 13 அதிகாரங்கள்)**

1. எந்தத் தேதியிலே இஸ்ரவேல் புத்திரர் உபவாசம் பண்ணினார்கள்?
2. அவர்கள் எதை உடுத்தி உபவாசம் பண்ணினார்கள்?
3. இஸ்ரவேல் சந்ததியார் எதை அறிக்கையிட்டார்கள் ?
4. லேவியருடைய படிகளின் மேல் நின்றவர்களின் பெயர்கள் என்ன?
5. நெகேமியாவின் தகப்பன் பெயர் என்ன?
6. தசமபாகத்தை யார் சேர்த்தார்கள்?
7. பென்யமீன் கோத்திரத்தார் எங்கே குடியிருந்தார்கள்?
8. எத்தனை பேர் ஆலயத்திலே பணிவிடை செய்தார்கள்?
9. செருபாபேலின் தகப்பன் பெயர் என்ன?
10. இஸ்ரவேலரை சபிக்க யாருக்கு கூலி கொடுக்கபட்டது?

## சென்ற மாத கேள்விகளுக்கு விடை எழுதியவர்கள்.

| | | |
|---|---|---|
| 1. ஜோசப் குமார் | - | கோவில்பட்டி |
| 2. செல்வமணி குணசேகரன் | - | காங்கயம் |
| 3. ரோஸ்லின் | - | கோவை |
| 4. ஜெபராஜ் | - | சென்னை |
| 5. மேத்யு | - | மதுரை |
| 6. சில்வியா | - | நெல்லை |
| 7. பால்ராஜ் | - | ஆத்தூர் |
| 8. டொனால்ட் | - | திருவள்ளூர் |
| 9. ஷெரின் | - | வள்ளியூர் |
| 10. மோசஸ் ராஜ்குமார் | - | சேலம் |
| 11. நான்சி பிரபாகர் | - | அரியலூர் |
| 12. ஆல்வின் | - | தூத்துக்குடி |
| 13. சாமுவேல் | - | சென்னை |

# தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்

Bro. பென்னி மார்ட்டின்

அருமையான திருமறை ஆசான் வாசகர்களே உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் நன்மை செய்யும்படியாக நற்பிதாவினால் கட்டளையிடப்பட்டிருக்கிறோம். அதற்காக பிரதிதினம் பிரயாசப்பட்டு பலருக்கு நன்மைகள் செய்தாலும் பிரதிபலன் உடனே கிடைக்காத காரணத்தால் சோர்ந்து போகிறோம். உறவுகளுக்கும், உளமார நண்பர்களுக்கும் உபகாரங்கள் பல செய்து அதற்கு கைமாறாக அவர்கள் உபத்திரவங்களை நமக்கு செய்து விடுகிறபடியால் உண்மையாகவே உருக்குலைந்து, சோர்வடைந்து விடுகிறோம். இவ்வுலகில் பல சந்தர்ப்பங்களில் சோர்வு எனும் உணர்வு மனித இனத்தின் மகிழ்ச்சியை மங்கச் செய்து விடுகிறது. இன்முகத்தோடு இன்பச் சுற்றுலா செல்பவர்கள் கூட இயற்கை காட்சிகளை பார்த்து பரவசம் அடைந்தாலும் காலப்போக்கில் சோர்வடைந்து விடுகிறார்கள். வெள்ளை மனம் கொண்ட பிள்ளைகளுக்கு பொம்மைகள் மீதும் விளையாட்டுச் சாமான்கள் மீது கொள்ளைப் பிரியம் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். இருந்த போதிலும் கூட, இவைகளின் மீது இவர்களுக்கு ஆரம்பத்திலிருந்த அதே ஆர்வமும், ஆரவாரமும் கடைசிவரை இருப்பதில்லை, காரணம் சோர்வு. பணப்பசி நிறைந்த உலகில் உயிரை பணையம் வைத்து பயணங்கள் பல மேற்கொண்டு கோட்டைகளில் கோலோச்சிய கோடீஸ்வரர்களும் அதே பணத்தினால் சோர்வடைந்து விடுகிறார்கள். அதேபோல் கிறிஸ்தவர்களும் அவர்கள் கிறிஸ்துவுக்குள்ளாக வந்தபோது அந்த ஆரம்ப நாட்களில் இருந்த அதே ஆனந்தமும் ஆவிக்குரிய ஆவலும் காலப்போக்கில் காணாமல் போய்விடுகிறதை நம்மால் காணமுடிகிறது.

நானிலத்தில் நாகரிகமானவர்களிடம் நற்கிரியைகளை அதிகமாகச் செய்யும் மார்க்கம் எதுவென்று கேட்டால் அவர்கள் நாணயமாக கிறிஸ்தவ மார்க்கம் என்று தான் சொல்வார்கள். **திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும் உலகத்தால் கறைபடாத படிக்கு தன்னை காத்துக் கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத**

**சுத்தமான பக்தியாய் இருக்கிறது** (யாக்கோபு1:27). இவ்வுலகில் நாங்களும் நற்கிரியைகள் செய்யும் மார்க்கம் தான் என்று மாயமாலமாய் மார்தட்டிக் கொள்ளும் மாண்பற்ற மத வெறியர்கள் கூட ஏகத்துவமாக ஏற்றுக்கொள்ளும் காரியம் கிறிஸ்தவர்கள் நலிவடைந்த வர்களுக்கு நற்கிரியைகள் செய்வதில் சிறந்தவர்கள் என்பது தான். கிறிஸ்தவம் தொன்றுதொட்டு தொலைநோக்குப் பார்வையில் தொய்வின்றி நற்கிரியைகளில் ஈடுபட்ட படியால் தான் மார்க்க பிரகாரமாக புதிய உயரங்களை தொட்டது மட்டுமல்லாமல், மானிடப் பிரகாரமாக பலருடைய இதயங் களையும் தொட்டிருக்கிறது. இத்தகைய ஸ்திதியில்தான் கிறிஸ்தவர்கள் நன்மை செய்வதில் சோபித்து விடக்கூடாது என்று சோதனைக்காரன் சோர்வு என்னும் விதையை விதைத்து சோம்பேறிகளாக பலரை மாற்றிவிட்டான். பிரியமானவர்களே, நம் தேவனைப் பிரியப்படுத்த அவரை ஆராதிக்கிறோம், உபதேச சம்பந்தமான காரியங்களுக்காக பலரை கடுமையாக கடிந்து கொள்கிறோம். ஆனால் நாம் நன்மை செய்வதில் நற்பெயர் பெற்று இருக்கிறோமா? இது இன்றைய காலத்தின் அவசிய மாகவும், அவசரமாகவும் இருக்கிறது. **அன்றியும் நன்மை செய்யவும், தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள்** (எபிரெயர் 13:16). நாம் நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருக்க வேண்டுமென்றால் குறைந்தது மூன்று காரியங்களை செய்ய வேண்டும்.

### I பொறுமை

பரவசமும், பரபரப்பும் நிறைந்த இவ்வுலகில் பொக்கிஷமாக பொதிந்து வைக்கப்பட வேண்டிய பொறுமையும் நற்பண்பும் நகைச்சுவையாக மாறிவிட்டது. ஏதாவது ஒன்றைப் பெற்றுக் கொள்ள நாம் பொறுமையோடு காத்திருந்தால் **என்ன இந்தக் காலத்தில் இவ்வளவு பொறுமையோடு காத்திருக்கிறீர்கள், உங்களுக்கு ரொம்ப தான் பொறுமை** என்று பரிவே இல்லாமல் பரிகாசம் செய்வதை நாம் பார்த்திருப்போம். அதையெல்லாம் நாம் பொருட்படுத்தாமல் பொறுமையோடு இருந்தால் நம்மை வேற்றுகிரகவாசிகளை போல் வேறுவிதமாக வேடிக்கை பார்ப்பார்கள். இன்றைய இயந்திரமயமான உலகில் முகர்ந்து பார்ப்பதையெல்லாம் நுகர்ந்து விட வேண்டும் எனும் நூதன கலாச்சாரம் களைகட்டியிருக்கிறது.பொறுமையின் பெருமையும், அருமையும் தெரியாதவர்கள் அதில் சிக்கிக் கொள்ளலாம். ஆனால், பொறுமையின் உறைவிடமாக இயேசு கிறிஸ்துவை பின்பற்றுகிறோம் என்று சொல்லிக் பின்பற்றுகிறோம்

என்று சொல்லிக்கொள்ளும் நாம் பொறுமை எனும் நற்பண்பை எந்த அளவிற்கு பெற்றிருக்கிறோம்? இதைப் பற்றி வேதாகமம் என்ன சொல்கிறது என்று பார்ப்போம். அப்போஸ்தலனாகிய பேதுரு (II பேதுரு 1:5- 7) வசனங்களில் கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் பெற்றுக் கொள்ள வேண்டிய அல்லது கூட்டி வழங்கவேண்டிய பண்புகளை பட்டியலிடுகிறார் இதில் பொறுமை எனும் பண்பும் பட்டியலிடப் பட்டிருக்கிறது. அதுமாத்திரமல்ல பொறுமை நம் கிறிஸ்தவ ஜீவியத்தில் இல்லை என்றால் நாம் கனி கொடுக்காதவர் களாகவும், கண் சொருகி போன குருடர்களாக இருப்பதாகவும் 8,9 வசனங்களில் குறிப்பிடுகிறார்.

யாக்கோபு ஆசிரியர் **யோபுவின் பொறுமையைக்குறித்து கேள்விப்பட்டிருக்கிறீர்கள்** என்று சொல்கிறார் (யாக்கோபு 5:11). பழங்கால பக்திமானாகிய யோபுவின் செல்வச்செழிப்பு அனைவராலும் அறியப்பட்ட ஒன்றாக இருந்தாலும் கூட காலங்களை கடந்து நம் கண்களுக்கு முன்பாக காட்சியளிப்பது அவருடைய பொறுமைதான். பிரியமானவர்களே, கிறிஸ்தவ வாழ்க்கை வேதவாக்கியங்களில் ஓர் ஓட்டப்பந்தயமாக விவரிக்கப்பட்டிருக்கிறது. நாம் எல்லாருமே அந்த ஓட்டப் பந்தயத்தில் ஓடிக் கொண்டுதான் இருக்கிறோம். ஆனால் பந்தயப் பொருளாக நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக ஓடவேண்டும். இந்தத் தொடர் ஓட்டப் பந்தயத்தில் தொலை விலுள்ள தொடுகோட்டைத் தொட்டு பரிசை தட்டிச்செல்ல தவிர்க்க முடியாததாகிவிட்டது. பொறுமை; இதை உணர்ந்தவராகத்தான் எபிரேய ஆசிரியர் **ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமானயாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்** என்று ஓங்கி ஒலிக்கிறார் (எபிரெயர் 12:1).

II **நம்மை நாம் விவசாயிகளாக பார்க்க வேண்டும்**

விவசாயம் நம் நாட்டின் முதுகெலும்பு என்பதை விவரம் தெரிந்தவர்கள் விநயமாக ஏற்றுக்கொள்வார்கள். நாம் சிட்டுக்குருவிகள் போல சுதந்திரமாக சுற்றித் திரிந்த சிறுவயது முதல் இந்த நாள் வரை நம்மில் பலர் விவசாயம் எப்படி செய்யப்படுகிறது என்பதை செய்யப்படுகிறது

பார்த்துக்கொண்டுதான் வருகிறோம். ஒரு விவசாயி விதை விதைத்த அடுத்தநாளே விளைச்சலை காணமுடியாது, விதை முளைத்துச் செடியாகி கொடியாகி பூ விட்டு, காயாகி காய் கனிவதற்குள் காலமும் கனிந்து விடுகிறது. இதற்கு இடைப்பட்ட காலத்தில் பயிரை பராமரிக்க நீர் பாய்ச்சி உரமிட்டு பூச்சிக்கொல்லி மருந்து அடித்து வறட்சி வெள்ளமென எல்லையில்லா தொல்லைகளை பொறுமையோடு சகித்து தான் விரும்பிய விளைச்சலை காண்கின்றார். இங்கே விவசாயிடம் இருந்து நாம் பொறுமையை கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. ஒரு விவசாயி நான் தினமும் பயிர்களை பராமரிக்கிறேன், நீர் பாய்ச்சுகிறேன் உரமிடுகிறேன். ஆனால் இந்த நன்றி இல்லாத பயிர்கள் இன்னும் விளைச்சலை எனக்குத் தரவில்லை என்று அறுவடை நாளுக்கு முன்பாகவே பயிர்கள் மீது கோபப்படுவதை சற்று கற்பனை செய்து பாருங்கள். அது எவ்வளவு முட்டாள்த்தனமாக இருக்கும். பல கிறிஸ்தவர்கள் நாங்கள் கர்த்தருக்காக அதை செய்கிறோம், இதைச் செய்கிறோம் எவ்வளவு காணிக்கை கொடுத்து இருக்கிறோம். இன்னும் அதற்கான பிரதி பலன் கிடைக்கவில்லையே என்று அங்கலாய்க்கிறார்கள். மனிதர்கள் பெரும்பாலும் மற்றவர்கள் செய்யும் உபகாரத்தை மறக்கும் மனப்பான்மை கொண்டவர்களாக இருக்கின்றனர், பலர் நன்றி இல்லாதவர்களாக இருக்கின்றனர் வேறு விதமாக சொன்னால் மனிதர்கள் அநியாயமாக நடந்து கொள்கிறார்கள். ஆனால், தேவன் உங்கள் கிரியையையும் நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காக காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்து விடுவதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே (எபிரெயர் 6:10).

### III **நாம் தொலை நோக்குப் பார்வை கொண்டிருக்க வேண்டும்.**

பிரியமானவர்களே நீதியின் பலனாகிய தேவனுடைய ஆசீர்வாதங்களை குறித்து வானுலகின் வாரிசுகள் என்று வாயார வாழ்த்தி கொள்ளும் நமக்கு தொலைநோக்குப் பார்வை இருக்கிறதா அல்லது குறுகிய பார்வை உடையவர்களாக இருக்கிறோமா? குறுகிய காலத்தில் நம்முடைய தீர்ப்பு அளவு கோலின்படி நன்மை பயக்காது அல்லது பலனளிக்காது, அதற்காக நாம் சோர்ந்து போகாமல் தொடர்ந்து நன்மை செய்துகொண்டே இருப்போம். பலவேளைகளில் கிறிஸ்தவர்கள் தேவனே உம்முடைய வழியில் காரியங்களை செய்து பார்த்தும் எந்த பலனும்

இல்லை மாறாக பிரச்சனைகள் தான் அதிகமாய் இருக்கிறது, இன்னும் சொல்லப்போனால் பிரச்சனைகள் முன்பை விட பல மடங்கு அதிகமாக இருக்கிறது என்று புலம்புவதை நாம் கேட்கிறோம் ஒரு சம்பவத்தின் முடிவுரை பார்ப்பதற்கு நமக்கு பொறுமை இல்லை என்றால் தேவன் மீது அரைகுறை குற்றச்சாட்டுகளை வைக்க வேண்டாம் மாறாக தேவனுடைய கிருபையிலும், உண்மைத்தன்மையிலும் விசுவாசத்தை வளர்த்துக்கொள்ள பழகவேண்டும்.

நாம் எதற்காக இப்பூமியிலே தேவனை சேவிக்கிறோம்? தற்காலிக ஆசீர்வாதங்களுக்காகவா அல்லது நிரந்தரமான நித்திய ஜீவனுக்காகவா? ஒரு வேளை சாத்தான் இவ்வுலகில் நமக்கு உண்டான எல்லா உடமைகளையும், உயிரையும் பறித்துப் போட்டாலும் தேவன் நிச்சயமாக நம்முடைய நற்கிரியைகளுக்கு பலனளிப்பார் எனும் நம்பிக்கையை மட்டும் இழந்துவிட வேண்டாம். பிறர்க்கு நன்மை செய்வதினால் உங்களுக்கு தீமைதானே ஏற்படுகிறது, இனியும் நன்மை செய்து கொண்டிருக்கலாமா? என்று பிசாசு நம்மை சோர்வடையச் செய்வான். ஆனால், தேவன் நமக்கு நிச்சயமாக இவ்வுலகத்தில் இல்லையென்றாலும் கூட வருகின்ற உலகத்தில் பலனளிப்பார் என்னும் நம்பிக்கையோடு நன்மை செய்து நாட்களை நகர்த்துவோம். "ஆகையால், எனக்கு பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக" (I கொரிந்தியர் 15:58).

## நாம் எப்படிப்பட்ட கனிகளைக் கொடுக்க வேண்டும்

- **மனந்திரும்புதலுக்கேற்ற கனி** — **மத். 3:8**
- **ஆவியின் கனி** — **கலா 5:22**
- **உதடுகளின் கனி** — **எபி. 13:15.**
- **நற்கிரியைகளின் கனி** — **கொலோ. 1:10.**

# கிறிஸ்தவனின் வாழ்க்கை

Bro. பாண்டியன்

**நா**ம் உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவர்கள் என்று வேதம் சொல்வதால் நாம் உலகத்தாரைப்போல் வாழ முடியாது. உண்மையான தேவன் யார்? என்பதையும் அவர் அனுப்பின வராகிய இயேசுவையும் நாம் அறிந்து பின்பற்றுவதால் நம் வாழ்க்கை வித்தியாசமானது. செல்வச் செழிப்பே பிரதானம் என்று அன்றும், இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த மனுஷரைப் பார்த்து இயேசு சொன்னார். உலக முழுவதையும் ஆதாயப்படுத்தினாலும் அந்த ஒன்றான மெய்த்தேவனையும், அவருடைய குமாரனையும் அறியாத வாழ்க்கை, வெறுமை யானதும், ஒன்றுக்கும் பிரயோஜனமற்றதுமாய் இருக்கிறது.

இவ்வுலக மக்கள் தங்கள் வாழ்க்கையில் பின்பற்ற அரசியல் தலைவர்கள், தத்துவ ஞானிகள் மற்றும் பல போதனைகளைப் பின்பற்றுகிறார்கள். கிறிஸ்தவர்களாகிய நாம் நம் எஜமானராக இயேசுவை ஏற்றுக்கொண்டு அவருடைய உபதேசத்தைப் பின்பற்றுகிறோம். அப்படிப் பின்பற்ற கூடுதலாக நமக்கு அப்போஸ்தல உபதேசம் கொடுக்கப்பட்டுள்ளது. பரபரப்பாக இயங்கிக் கொண்டு இருக்கிற இந்த உலகில் பொறுமையோடே இயேசுவை நோக்கி ஓடுங்கள் என்கிறது நம் அப்போஸ்தல உபதேசம்.

ஒவ்வொரு கிறிஸ்தவனின் வாழ்க்கைக்கும் மேகம் போன்ற திரளான சாட்சிகள் வேதத்தில் உள்ளது என்றும், அதன் காரணமாக நாம் அவர்களை கவனமாக ஆராய்ந்து நோக்கிப் பார்த்து, நம் பாரங்களை தள்ளிவிட்டு நம் ஆண்டவரை நோக்கி பொறுமை யோடே ஓட முடியும் என்றும் பார்க்கிறோம் (எபி 12:1). நாம் எப்படி வாழ வேண்டும் என்பதற்கே நமக்கு முன்பாக வாழ்ந்த தேவபக்தியுள்ள மனுஷர் அநேகரை நமக்கு முன்மாதிரியாக வேதம் வைத்துள்ளது. அதே போல எப்படி வாழக் கூடாது என்பதற்கும் பலருடைய முன்னுதாரணம் கொடுக்கப்பட்டுள்ளது. (1கொரி 10:11) ஆக நாம் ஏறிட்டு பார்க்க வேண்டியது எதிர் வீட்டாரோ, பக்கத்து வீட்டாரோ அல்ல. வேதத்திலுள்ள தேவபக்தி யுள்ள ஜனங்களே. நம்மை சூழ்ந்துள்ள அவ்களையே நாம் பார்க்க வேண்டும்.

நம் கிறிஸ்தவ ஓட்டத்தைத் தடை செய்யும் முக்கியமான விஷயம் இருதயத்தின் பாரங்கள். அவைகளைத் தள்ளிவிட்டு ஓட

வேண்டும் என்பதே நம் பொறுப்பு. லூக்கா 21:34 ல் ஆண்டவர் சொன்னது, உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும், லௌகீக கவலைகளினாலும், வெறியினாலும் பாரமடையாதபடி எச்சரிக்கையாயிருங்கள். உணவு விஷயத்தில் டாக்டர்களும் அளவாக உண்ணும்படியாக ஆலோசனை சொல்கிறார்கள். இங்கு குறிப்பிடப்படும் வெறியினாலும் என்பது மதுபான வெறியைக் குறிக்கிறது (எபே 5:18) குடிப்பழக்கம் குடும்பத்தை மாத்திரமல்ல, சபை வாழ்க்கையையும் பாழாக்கும். சிற்றின்பத் திற்கு ஆசைப்பட்டு அநேகர் பேரின்பத்தை (நித்திய ஜீவனை) இழந்து போவதைப் பார்க்கிறோம். மாத்திரமல்ல, உலகக் கவலைகள் நம்மை பாரப்படுத்தாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதற்கு சபைக் கூடுதலுக்கு வாழ்வில் முதலிடம் கொடுப்பது மிக அவசியமாகும்.

நம் வாழ்க்கை இச்சையடக்கத்தோடே ஓடக்கூடிய ஒரு பந்தயம் என்று I கொரி 9:24,25 ல் வாசிக்கின்றோம். ஆக, ஒரு கிறிஸ்தவன் பொறுமையோடே மாத்திரமல்ல, இச்சை யடக்கத்தோடே ஓட வேண்டும். அப்போதுதான் தேவனிடமிருந்து பரிசை பெறமுடியும். எபேசி 4:22 ல் மோசம் போக்கும் இச்சை களாலே கெட்டுப் போகிற பழைய மனிதனையும், பொய்யையும் நாம் களைந்து போட வேண்டும். ஒருவன் பாவியாகிறதற்கு மற்றவரல்ல அவனுடைய சுய இச்சையே காரணம் என்கிறார் யாக்கோபு. நம் பாவங்களுக்கு இயேசு பரிந்து பேசுவது நாம் தொடர்ந்து பாவம் செய்ய அல்ல. அதை அறிக்கையிட்டு மன்னிப்பு பெற்று பாவஞ் செய்யாமல் வாழ கடும் முயற்சி எடுப்பதே கிறிஸ்தவ வாழ்க்கை (Iயோவா 3:6) அதற்கு தேவக்கிருபை நிச்சயம் உண்டு. அதனால் தான் சங் 51 ல் தேவனே சுத்த இருதயத்தை தாரும் என்று தாவீது கெஞ்சுகிறார். நாமும் அப்படியே ஜெபிப்போமாக.

கிறிஸ்தவ வழ்வில் நம்மை பாவம் சுற்றி நெருங்கி யிருப்பதாகவும் அவைகளைத் தள்ளிவிட்டு பொறுமையோடே ஓட வேண்டும் என்று பார்த்தோம். தள்ளி விடுதலைத்தான் பவுல் நல்ல போராட்டம் என்று 2 தீமோ 4:7ல் என்று குறிப்பிடுகின்றார். பாவத்தோடே வாழ்க்கை தொடருவது நல்ல போராட்டமல்ல. அது நம் விசுவாசத்தைக் கவிழ்த்துப் போடும். நல்ல போராட்டத்தின் முடிவில்தான் அனைவருக்கும் நீதியின் கிரீடம் வைக்கப் பட்டுள்ளது. ஆனால், இவ்வுலகம் ஒளியைப் பார்க்கிலும் இருளை அதிகம் விரும்புகிறது என்று நம் ஆண்டவர் வெளிப்படுத்தி யுள்ளார் (யோவா 3:19,20). அதையே பவுல் சொல்லும்போது சபை மக்கள் அந்தகாரத்தின் கிரியைகளைத் தள்ளிவிட்டு

ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக் கொள்ளச் சொல்கிறார் (ரோம 13:12). எப்படி அழுக்கான ஆடையைக் களைந்து சுத்தமான ஆடையை உடுத்திக் கொள்கிறோமோ அதைப்போல பாவத்தைத் தள்ளிவிட வேண்டும். பேதுரு இதைப் பற்றிச் சொல்லும்போது சகல துர்க்குணத்தையும், கபடு, வஞ்சகங்கள், பொறாமை மற்றும் புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு (1பேது 2:1-3) என்று அறிவுறுத்துகிறார்.

கிறிஸ்தவ வாழ்க்கையைப் பற்றி தொடர்ந்து பேசுகிற பேதுரு அது பாடுபடுதலை உள்ளடக்கியது என்கிறார். அதாவது, தமது இச்சைகளின்படி பிழைக்காமல் தேவனுடைய சித்தத்தின்படி பிழைக்க பாவங்களை விட்டோய்ந்திருப்பான் (1பேது 4:1,2) என்கிறார். சிலர், சில வசனங்களை தவறாகப் பயன்படுத்து கின்றனர். அதாவது, இரட்சிப்புக்கு முன்பான ''எல்லாரும் பாவஞ்செய்து'' என்ற வசனத்தையும் நமக்குப் பாவமில்லை யென்போமானால் போன்ற வசனங்களையும் தவறாகப் புரிந்து கொண்டு பாவத்திற்கு ஆதரவும் சிலர் தெரிவிக்கிறார்கள். இது தவறு. I தெச 4:3 நீங்கள் பரிசுத்தமுள்ளவர்கள் ஆக வேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது என்று தெளிவாக சொல்கிறது. இதைப்பற்றி மூப்பனாகிய யோவான் குறிப்பிடும் போது நாம் தேவனால் உண்டாயிருக்கிறோம். இவ்வுலகம் பொல்லானுகளுக்குள் கிடக்கிறது என்றும், தேவனால் உண்டான வன் அல்லது பிறந்தவன் எவனும் பாவஞ்செய்யான் என்றும் குறிப்பிடுகிறார். அதின் அர்த்தம் அவர்கள் பாவத்தில் தொடராமல் பரிசுத்த வாழ்வையே தொடருங்கள் என்பதே!

✝

**நாம் ஒன்றுக்கும் கவலைபடாமல் தேவனிடம் நம் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான மிகச்சிறந்த காரணங்களுள் ஒன்று வாழ்நாள் முழுவதும் முயற்சி செய்தும் முடிக்காமல் இருக்கும் காரியங்களை நாம் முழங்காலில் நிற்பதால் தேவன் சில நிமிடங்களில் முடித்து விடுகிறார்.**

# *யெப்தா*

**Bro. K.M. பிலிப்**

**நி**யாயாதிபதிகளில் ஒருவரான யெப்தாவைக்குறித்து தேவனின் அறிமுகமே, கீலேயாத்தியனான **யெப்தா பலத்த பராக்கிரமசாலியாய் இருந்தான்** என்று மிகச் சிறப்பானதாக பெருமைக்கும், பாராட்டுக்குரியதாய் இருக்கிறது என்பதை காண்கிறோம். (நியா 11:1) ஆம் பெரும்பாலும் யாறொருவரையும் அறிமுகப்படுத்தும்பொழுதே அவருடைய பண்புகளை அறிந்து வைத்திருப்போம். சிலருடைய பெயர் சொல்லப்பட்டதுமே **அவனா? அவளா?** என்று கேட்பவர் முகம் வெறுப்படைவதைக் காண்கிறோம். யாக்கோபு என்றாலே **எத்தன்** (ஏமாற்றுபவன்) என்றும், சிம்சோன் என்றதும் தன் வாழ்க்கையை **இழந்தவன்** என்றும், யூதாஸ் என்றதும் துரோகி என்றும் தனக்கும் பிரயோஜனமில்லாமல் பிறரும் விரும்பி நெருங்க முடியாத வாழ்க்கை வாழ்வது சரியா? இவன் பிறந்ததைக் காட்டிலும் பிறவாமல் இருந்தால் நலமாய் இருக்குமே என்று பிறர் நினைக்கும் வாழ்க்கை வாழலாமா? அப்படியென்றால், தேவஜனமாகிய நம் வாழ்க்கை குறித்த அறிமுகம் இவ்வுலகில் எப்படி இருக்க வேண்டும். நம் பெயரைச் சொன்னதும் கேட்பவர் முகம் பிரகாசிக்க வேண்டாமா? நம்மை சந்திக்க ஆர்வத்தைத் தூண்ட வேண்டாமா? வேதத்தில் சில எடுத்துக்காட்டான தேவ பிள்ளைகளை முன் நிறுத்துவோம். ஆபிரகாம் – என்றதும் அவர் விசுவாசிகளுக்கெல்லாம் **தந்தை**; ஈசாக்கு என்றால் தகப்பனுக்குக் கீழ்ப்படிவதில் தன் உயிரையே ஒப்புக்கொடுத்த **பிள்ளை**; யோசேப்பு என்றதும் எங்கும் எதிலும் உண்மையும் பக்தியில் உறுதியுமான சிறந்த **உழைப்பாளி**; யோசுவா – என்றதும் ஊரே உலகமே தவறான நிலையில் நின்றாலும் கர்த்தரை சேவிப்பதில் குடும்பத்துடன் நிலை நின்ற **விசுவாசி**; எஸ்தர் – என்றால் தன்னைச் சார்ந்த தேவ ஜனத்திற்காக தன் இன்னுயிரையே பணயம் வைத்த **பாசக்காரி**; ரூத் – என்றதும் ஒருமுறை கிடைத்த ஜீவனுள்ள மெய்யான தேவ உறவை இழந்துவிடாமல் இறுதிவரை இறுகப்பற்றிக் கொண்ட **பாக்கியசாலி**; தானியேல் என்றாலோ **தேவனா? இராஜாவா? என்ற** நிலையில் தேவனையே தன் நம்பிக்கையால் கொண்ட **நம்பகமானவன்**; மரியாள் – என்றதும் தன் கன்னிப் பருவத்திலேயே இதோ நான் ஆண்டவருக்கு அடிமை என்று ஒப்புக்கொடுத்த **ஒப்பில்லாதவள்**; தீமோத்தேயு என்றதும் **மாயமற்ற விசுவாசி, உத்தமக்குமாரன்**; என்று இப்படி இவர்கள் இன்றும் பாராட்டுக்கும், பெருமைக்கும் உரியவர்களாய்

அநேகருடைய உள்ளத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்படி உலகத்தார் விரும்பும் வாழ்க்கை, தேவன் மகிமைப்படும் வாழ்க்கை கிறிஸ்தவர்களாகிய நாமும் வாழ வேண்டுமல்லவா! இங்கும் யெப்தா – என்றால் தேவன் விடுவிக்கிறவர் என்று அர்த்தமாகும். பெயருக்கேற்ப தேவனால் விடுவிக்கப்படும் அளவில் யெப்தாவின் வாழ்க்கை தேவனுக்கு முன்பாகவும், மனுசருக்கு முன்பாகவும் எப்படியெல்லாம் இருந்ததென்பதை கூர்ந்து கவனிப்போம். [நியாயாதிபதி – 11 –ம் அதிகாரம்:–

I. **முதலாவதாக யெப்தா தேவனுடைய இரக்கத்தைப் பெற்றவன்:-**

யெப்தா அந்நிய ஸ்திரீயின் பிள்ளையென்று சொந்த சகோதரர்களால் துரத்திவிடப்பட்டு ஓடிப்போனவன். அவன் குடியிருந்த தோப் தேசத்து வீணரான மக்கள் அவனோடு கூடிக் கொண்டார்கள். ஆனால், யெப்தா வீணரான அந்த மக்களை போர் வீரர்களாக மாற்றினான். அற்பமாய் என்னப்பட்ட மக்களையும் தேவனால் விசேஷமானவர்களாக மாற்ற முடியும் என்பதை யெப்தா நிரூபித்தான். இது அவனது இரக்கத்தைக் காட்டுகிறது. உலகத்தில் நம்மைச்சுற்றி அற்பமாய், ஈனமாய் என்னப்படுகிற பரிதாபத்திற்குரிய மக்கள் இருப்பதைப் பார்க்கிறோம். அவர்களுக்கு சுவிசேஷத்தை நாம் அறிவிப்பதன் மூலம் அவர்களை சிறப்புக்கும், பெருமைக்கும் உரிய நல்ல குடிமக்களாக கிறிஸ்தவர்களாக மாற்ற நம்மாலும் முடியும் என்பதை யெப்தா முன் நிறுத்துகிறான். ஆம், இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் இரக்கம் பெறுவார்கள். யெப்தா தன் பெயருக்கேற்ப தேவன் விடுவிக்கிறவர் என்பதில் உறுதியாயிருந்தான். நியா 11:11 ல் யெப்தா தன் காரியங்களையெல்லாம்..... கர்த்தருடைய சன்னதியிலே சொன்னான் என்ற வாசகம் அவன் தேவன் மீது வைத்திருந்த பக்தி வாழ்க்கையை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. இந்த விசுவாசத்தை தேவன் கனப்படுத்தினார். ஆம் துரத்திவிடப்பட்டு தனிமனிதனாய் ஓடிப் போன பெய்தாவை யார் துரத்தினார்களோ அவர்களே அவனைத் தேடி வந்தார்கள். யார் அவனை அவமானமாக நினைத்து ஒதுக்கினார்களோ அவர்களே அவனைத் தங்களுக்குத் தலைவனாக ஏற்றுக் கொண்டாடும்படி தேவன் செய்தார். அன்பான தேவ மக்களே நாமும் எந்நிலையிலும் தேவ பக்திக்குரிய வாழ்க்கையில் நிலைத்து நின்றால் தேவன் நம் வாழ்க்கையை நிலைநிற்கச் செய்வார். ஒவ்வொன்றுக்கும் ஒரு காலம் உண்டு; தேவன் சகலத்தையும் அதினதின் காலத்தில் நேர்த்தியாய் செய்வார் என்பதை புரிந்து கொள்வோம். [பிர 3:1,11].

II **யெப்தா தேவன் தனக்குக் கொடுத்த வாய்ப்புகளைச் சரியாய் பயன்படுத்திக் கொண்டான்:-**

இவன் பராக்கிரமசாலியாய் இருந்தாலும், முரடனோ, மூடனோ அல்ல, விவேகியாய் இருந்தான். ஆம் பராக்கிரமும், விவேகமும் இணைந்திருந்தால் மட்டுமே தீரமான, வீரமான வெற்றியைப் பெற முடியம். தாவீது சிங்கத்தை, கரடியைக் கொன்ற பராக்கிரமசாலிதான். ஆனாலும் கோலியாத்தை வீழ்த்துவதில் விவேகமாயும் செயல்பட்டான். சரியாய் நெற்றியடி அடித்தான். இராட்சதன் வீழ்ந்தான். **ஓடுகிற பாம்பை நடுக்கண்டத்தில் மிதிப்பவன்** தைரியசாலி அல்ல. அவன் தன் உயிருக்கு ஆபத்தை வருவித்துக் கொள்ளும் முரடனும், முட்டாளும் ஆவான். வேதம் சொல்லுகிறது. விவேகி ஞானமாய் நடந்து கொள்ளுவான். தன் நடையின்மேல் கவனமாய் இருப்பான். தன் வழியை சிந்தித்து அறிவோடு நடந்து கொள்வான். [நீதி 16:21;14:15,8;13;16]. இங்கு யெப்தா தன்னை நாடி வந்தவர்களிடம் தன் பெருமையையோ, கோபத்தையோ காட்டவில்லை. மாறாக, விவேகமாய் நடந்து ஞானமாய் பேசி ''கர்த்தர் அம்மோனியரை என் முன்னிலையாய் ஒப்புக்கொடுத்தால் என்னை உங்களுக்கு தலைவனாக வைப்பீர்களா? என்று மூப்பரைக் கேட்டான். [11:9] அவர்கள் அதற்கு சம்மதித்து அவனை தங்களுக்குத் தலைவனும், சேனாதிபதியுமாக வைத்தார்கள். யெப்தா தேவன் கொடுத்த வாய்ப்பில் விவேகமாய் நடந்து தன் வாழ்க்கையை உயர்த்திக் கொண்டான். பிரியமானவர்களே, அந்நியர்களும், பாவிகளுமாயிருந்த நமக்கு **நானே வழியும் சத்தியமும்** ஜீவனுமாய் இருக்கிறேன். என் வழியாய் பிரவேசித்து பிதாவோடு சேருங்கள் என்று சொல்லி நம்மைத் தேடி வந்து அழைத்து ஞானஸ்நானத்தின் மூலம் பரிசுத்தப்படுத்தி தேவப் பிள்ளைகளாய் சபையில் சேர்த்துக் கொண்டாரே, இந்த வாய்ப்பை இழந்து போகலாமா? ஜீவ வழியானது உன்னதத்தை நோக்கும் வழியாகும் [நீதி 15:24] என்பதை புரிந்து கொண்டு நித்தியத்தை அடைய கிடைத்த வாய்ப்புகள் ஒவ்வொன்றையும் விவேகமாய் பற்றிக் கொள்வோம்.

III **யெப்தா தேவனையே சார்ந்திருந்தான்:-**

கீலோயாத் மக்கள் யெப்தாவைத் தேடி வந்ததும், இவை தன் பராக்கிரமத்திற்கு கிடைத்த வெற்றி என்று தன் பராக்கிரமத்தின் மேல் சார்ந்திருக்கவில்லை. மாறாக, ஒதுக்கப்பட்டு உதவாதவன் என்று தள்ளப்பட்ட தன்னை அதே மக்கள் நாடி வரும்படியும், தன்னை தலைவனாக்கி பெருமைப்படவும் செய்த தேவனையே

சார்ந்திருப்போம். அவருக்கே நன்றியும், துதி கனம் செலுத்துவோம். யெப்தாவுக்குப் பொறுப்பேற்றுக் கொண்ட தேவன் நம்மையும் பொறுப்பேற்றுக் கொண்டு உயர்த்துவார்.

IV **பராக்கிரமசாலியான யெப்தா சமாதானத்தை விரும்புகிறவன்:-**

யெப்தா பராக்கிரமசாலிதான், வெற்றிகளை பெற்றவன்தான் எல்லாவற்றிற்கும் மேலாக தேவ தயவைப் பெற்றவன். எங்கும், எதிலும் வெற்றியே. ஆனாலும் தேவப் பிள்ளை யெப்தா எதிரிகளிடத்திலும் சமாதானமாய் இருக்க விரும்பினான். ரோமர்– 12:8 ன் படியான **கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுசரோடும் சமாதானமாய் இருங்கள்** என்ற பரிசுத்த ஆவியானவரின் ஆலோசனையை அன்றே செயல்படுத்தினான். காரணம், **சமாதானம் பண்ணுகிறவர்கள்** பாக்கியவான்கள். அவர்கள் தேவனுடைய புத்திரர்கள் எனப்படுவார்கள். (மத்:5:8) என்பதை நிரூபித்தான். இரண்டுமுறை எதிரி இராஜாவுக்கு சமாதான தூது விட்டான். ஆபிரகாமின் பிள்ளை ஈசாக்கும் அப்படியே, துரவு வெட்டுவதில் புறஜாதிகளுக்கு விட்டுக் கொடுத்தான். இதைப் புரிந்து கொண்ட அவர்கள் **நிச்சயமாய் கர்த்தர் உம்மோடே கூட இருக்கிறார்** என்று அவனோடே இணக்கமாய் வாழ விரும்பி சமாதான உடன்படிக்கை செய்து கொண்டனர். ஆம், நாமும் கூட சமாதானத்தை விரும்பினால் மக்கள் நம்மில் ஜீவிக்கின்ற தேவனைப் புரிந்து கொண்டு நம்மோடு இணக்கமாய் வாழ விரும்புவார்கள். நம்மோடு மட்டுமல்ல அவர்கள் தேவனோடும் நெருங்கி வாழ வழிவகுக்க முடியும். அவர்களும் தெய்வீக சமாதானத்தோடு வாழ நாம் வழிகாட்ட முடியும்.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ✝

## *நாளும் நடப்பும்*

- **இந்தியாவில் கொரோனா கொள்ளை நோயின் தாக்கம் சற்று குறைந்திருக்கிறது.**
- **ஊரடங்கால் இந்தியாவில் இரண்டுகோடி சம்பளதாரர்கள் வேலை இழப்பு.**
- **தமிழகத்தில் பருவ மழை தீவிரமடைந்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி.**
- **கடுமையான நிதிநெருக்கடியில் லட்சுமி விலாஸ் வங்கி - ரிசர்வ் வங்கி தலையீடு.**